[2011 பிப்ரவரி 10

(உ) சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர்கள் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதியான இராயபுரத்தில் உள்ள அரசு ஸ்டான்லி மருத்துவமனை, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மருத்துவமனையாகும். ஆனால், தற்போது அந்த மருத்துவமனையின் நிருவாகம், அலங்கோலத்தின் புராதனச் சின்னமாக இன்று விளங்கிக்கொண்டிருக்கின்றது. மருத்துவமனை கண்காணிப்பாளர் ஒருபுறம், மருத்துவமனை Dean மற்றொருபுறம் என்று ஆளுக்கு ஒருவராக, 'நீ பெரியவனா அல்லது நான் பெரியவனா' என்கிற சண்டைதான் அந்த மருத்துவமனையில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இதனால் அப்பாவி பொது மக்கள், நோயாளிகள், மருத்துவர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக மருத்துவர்கள், குறிப்பாக, மருத்துவமனை கண்காணிப்பாளர் திருமதி பிரியா அவர்களுடைய அடாவடித்தனமான செயல்களால் முற்றிலுமாக வெறுத்துப்போய், அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஆனால், அந்த ஆர்ப்பாட்டம் நடந்து முடிந்தவுடன், அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதபட்சத்தில், நேற்றைக்குக்கூட மருத்துவமனை மருத்துவர்கள் 'கருப்பு' பேட்ஜ் அணிந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றார்கள். இன்று மருத்துவமனை முழுவதும் மருத்துவர்கள் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, இந்தத் தகவல் அரசுக்குத் தெரியுமா, இல்லை அரசு தெரிந்து நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

'தூங்குபவர்களை எழுப்பிவிடலாம், ஆனால் தூங்குபவர்களைப்போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது'. அந்த மருத்துவமனையில் நிருவாகம் அலங்கோலம் இருக்கிறது என்பதை அறிந்து அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டதா என்றால் இதுவரையில் இல்லை. 'ஒரே உறையில் இரண்டு கத்தி' என்பதுபோல ஒரு மருத்துவமனையிலே கண்காணிப்பாளர் ஒருபுறமும், மருத்துவமனை Dean மற்றொருபுறமும் என்று ஆளாளுக்கு சண்டை போடுகிறார்கள். இன்றைக்கு நிருவாகம் அலங்கோலமாக உள்ள அரசு ஸ்டான்லி

2011 பிப்ரவரி 10] [திரு. டி. ஜெயக்குமார்]

மருத்துவமனையில் மருத்துவர்கள் மட்டுமல்ல, நோயாளிகளும் முழுமையான அளவிற்கு பாதிப்படைகின்ற நிலை இருக்கின்றது. எனவே, அரசு இனியும் காலந்தாழ்த்தாமல் ஸ்டான்லி மருத்துவமனையில் என்னதான் நடக்கிறது என்பதைக் கண்டறிந்து, தவறு யார் செய்தாலும் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் திருமதி பிரியா மீது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை காட்டுகிறார் என்றே எனக்குத் தெரியவில்லை. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, யானையால் மிதிக்கப்பட்டு இறந்தவர்கள் குறித்து நிறைய உறுப்பினர்கள் கொடுத்துள்ளார்கள். *(குறுக்கீடு)* முதலிலே நான் சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடு)* அதாவது, நீங்கள் உட்பட நிறைய உறுப்பினர்கள் பேச வாய்ப்பு கேட்டிருக்கிறார்கள். அத்தனை பேரும் இன்றைக்குப் பேச வேண்டும். இன்று guillotine நேரம். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால் அவரை மட்டும் உரையாற்றச் சொல்லி முடிக்கிறோம். அவ்வளவுதான். *(குறுக்கீடு)* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்கிறீர்களா? *(குறுக்கீடு)*

(முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் அக்கறையுடன் அவரது கருத்தைத் தெரிவித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இது நிருவாகப் பிரச்சினை. தமிழகத்திலே இருக்கிற அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், புதியதாக மருத்துவக் கல்லூரிக்கு Dean-என்றும் மருத்துவமனைக்குக் கண்காணிப்பாளர் என்றும் M.C.I norms அடிப்படையில் நாங்கள் நியமித்திருக்கிறோம். அது அவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு. நீங்கள் சொல்கின்ற Dean இப்பொழுது D.M.E. ஆக ஆகிவிட்டார்கள். அதனால் இப்போது பிரச்சினை இல்லை. மருத்துவமனைகளில் சில பிரச்சினைகள் கடந்த வாரம் சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்டதால் ஒரு குழு அமைக்கப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. மருத்துவமனையில் மருத்துவர்கள் சில பிரச்சினைகளை முன்னிட்டு போராட்டங்களை அனாவசியமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில், நாங்கள் தூங்கவில்லை, விழித்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2011 பிப்ரவரி 10

ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் தூண்டி விடாமல் இருந்தால் போதும். ஏனென்றால், அரசியல் கட்சிகள் தற்போது இந்த அரசியல் ஆக்க வேண்டாம் என்று இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) நாங்கள் நடிக்கவில்லை. (குறுக்கீடு) தூங்கவும் இல்லை, நாங்கள் நடிக்கவும் இல்லை. அந்தப் பழக்கம் எங்களுக்குக் கிடையாது. நாங்கள் இருக்கின்ற வரை எங்களால் முடிந்தவரை நாங்கள் உழைத்துக்கொண்டிருக்கின்றோம். மருத்துவ நிருவாகத்தில், சில மருத்துவர்களைக் கடுமையாக கண்காணிக்கும்போது, அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு, அதனால் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதில் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) உட்காருங்கள், அதெல்லாம் முடியாது. மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010, 2010-2011 ஆம் ஆண்டுகளுக்கான அவையின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் என்ற பொறுப்பினை வழங்கி இருக்கிற பசியில்லாத தமிழகம், பிணி இல்லாத தமிழகம், கல்விப் புரட்சி கண்ட தமிழகம், கடன் இல்லாத விவசாயிகளைக் கொண்ட தமிழகம் என இந்தியாவிலேயே முன் மாதிரி மாநிலமாக, வழிகாட்டி மாநிலமாகத் திகழச் செய்து, 1971 ஆம் ஆண்டு இந்தியாவின் இரும்பு மங்கை அன்னை இந்திரா அவர்களின் துணையோடு ஆட்சிப் பொறுப்பேற்றதைப்போல் (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டிலும் இந்திய நாட்டின் இன்றைய தியாகத் திருவிளக்கு அன்னை சோனியா காந்தி அவர்களுடைய ஆதரவோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நன்றி உணர்வோடு மீண்டும் மகத்தான வெற்றி பெற்று 6-வது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்கயிருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) இமயம் போன்று உயர்ந்து நின்று, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இமையாய் இருந்துவரும் இனமான எங்களுடைய